## பிப்ரவரி - 2

**"மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்." - ரோம 8 : 13**

மாம்சத்தின் படி பிழைப்பதென்றால் என்ன? இதற்கு நாங்கள் கொடுக்கும் உத்தரவு, விழுந்துபோன மானிட சுபாவத்தின் மன வாஞ்சைகளுக்கும், அடங்கா ஆசைகளுக்கும், இசைவாகவும் அவைகளைத் திருப்திப்படுத்தவும் ஜீவிப்பதே. இதைச் செய்வதற்கு இதுதான் மிகவும் சுலபமான காரியம். நாம் செய்ய வேண்டியதெல்லாம் கவலையற்று நம்மை மாத்திரம் நமது பழைய சுபாவத்தின் நீரோட்டத்தில் கைவிட்டு விட்டு அதற்கு எதிராகப் போராடுவதை நிறுத்தி விடுவதுதான். இதைச் செய்த உடனே நாம் நீரோட்டத்தின் போக்கிலே மிதந்து செல்ல ஆரம்பிக்கிறோம். சீக்கிரத்தில் நீரோட்டம் அதிகரித்த வேகமாவதையும், அது எப்படி அதிகதிகமாக கஷ்டமாவதையும் காண்போம்.

**- Z '95, 8 (R 1748).**

மாம்சமாவது, பிறவிக்குரிய சம்பாதித்த பாவமுள்ள குணமாகும். அதோடு, பிறவிக்குரிய சம்பாதித்த சுயநலமான குணமாகும். ஆகையால், இவைகளின்படி ஜீவித்தல் என்றால், பிறவிக்குரிய சம்பாதித்த சீர்கேட்டின் நியமத்தின் படியும், பிறவிக்குரிய சம்பாதித்த சுயநலத்தின் நியமத்தின் படியும் நடப்பதாகும். இந்தவிதமான போக்கு புது இருதயத்தையும், மனதையும், சித்தத்தையும் கொன்று விடுகிறதினாலும், மனுஷீகமும் பலியாக ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதினாலும், திரும்பி நழுவுகிறவர்களும் மாம்சத்தின் படி தொடர்ந்து ஜீவிப்பவர்களும் இறுதியாக சாகவும், சதாகாலமும் மரித்த நிலையில் இருக்கவும் வேண்டுமென்பது தவிர்க்கக் கூடாததாயிருக்கிறது. **- P '33. 16**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யோபு 4:8; நீதி 14:12; மத் 26:41; ரோம 6; 8:4-12; கலா 6:7,8; எபி 6:4-8;10:26-31; யாக் 1:15; 4:4; 2பேது 2:20-22; 1யோவா 5:16; யூதா 11-13; 2கொரி 6:16; எபே 4: 22.

**கோபுர வாசிப்பு :** Z '11, 136, 169 (R 4809, 4830)

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தின் அனுபவம் எவ்வாறு சரிக்கட்டப்பட்டன? அதிலுள்ள உதவிகள் தடைகள் பலன்கள் எவை?